WWW.OLEVELAPI.COM



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**42 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

| | | |
|---|---|---|
| කර්ණාටක සංගීතය | I, II | පැය තුනයි |
| கர்நாடக சங்கீதம் | I, II | மூன்று மணித்தியாலம் |
| Carnatic Music | I, II | Three hours |

## கர்நாடக சங்கீதம் I

**கவனிக்க :**
- (i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- (ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- (iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**
- (iv) அவ்விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** அப்பியாச கானத்திற்கும் சபாகானத்திற்கும் பொதுவான உருப்படி
(1) ஜதிஸ்வரம் (2) வர்ணம்
(3) தில்லானா (4) இலட்சணகீதம்

**2.** பந்துவராளி இராகத்தின் நேர் சுத்தமத்யம இராகம்
(1) சக்ரவாகம் (2) கரஹரப்ரியா
(3) மாயாமாளவகௌளை (4) நடபைரவி

**3.** க்ரஹ வேறுபாடு கிடையாத உருப்படிகளைக் கொண்ட இசை மரபு
(1) கர்நாடக இசை (2) நாட்டார் இசை
(3) மேற்கத்தய இசை (4) ஹிந்துஸ்தானி இசை

**4.** "மோஸஹோதனலோ" - என்ற அடானா இராகப் பதத்தைப் பாடிய வாக்கேயகாரர்
(1) சியாமாசாஸ்திரிகள் (2) முத்துஸ்வாமி தீட்சிதர்
(3) புரந்தரதாஸர் (4) தியாகராஜ சுவாமிகள்

**5.** ஷட்சுருதி தைவதத்தினதும், அது ஒலிக்கும் ஸ்வரஸ்தானத்தினதும் ஸ்வர சங்கேதங்கள் முறையே
(1) திநு (2) துநி
(3) துநு (4) துந

WWW.OLEVELAPI.COM

**6.** ஸமகமபதநிஸ - ஸ்நிதபமகரிஸ என்ற ஆரோகண அவரோகணத்தையுடைய 28வது மேளகர்த்தாவின் ஜன்யராகம்
(1) பிலஹரி (2) மத்தியமாவதி
(3) கல்யாணி (4) கமாஸ்

**7.** "சங்கிரக சூடாமணி" என்னும் நூலை இயற்றியவர்
(1) வேங்கடமகி (2) கோவிந்தாசாரியார்
(3) மதங்கர் (4) நாரதர்

**8.** "புல்லாங்குழல் ஓர் ஏகத்வனி வாத்தியம் ஆகும்." இங்கு ஏகத்வனி வாத்தியம் எனக் குறிப்பிடப்படுவதன் காரணம்
(1) பக்க வாத்தியமாகவும் பிரதான வாத்தியமாகவும் வாசிக்கப்படும் வாத்தியம் என்பதால் ஆகும்.
(2) இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய வாத்தியம் என்பதால் ஆகும்.
(3) இயல்பாகவே சுருதி நிர்ணயிக்கப்பட்ட வாத்தியம் என்பதால் ஆகும்.
(4) தசவித கமஹங்களையும் தெளிவாக வாசிக்கக்கூடிய வாத்தியம் என்பதால் ஆகும்.

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

**9.** ப்ரஹ்ம சக்கரத்தில் வரும் இராகங்களின் மேள எண்கள்
(1) 49 - 54 (2) 50 - 55 (3) 55 - 60 (4) 61 - 66

**10.** பழனி முருகன் மீது பாடப்பட்ட திருப்புகழ்
(1) ஏறுமயில் (2) வசனமிகவேற்றி
(3) நாடித்தேடி (4) அபகார நிந்தை

**11.** "இராமபிரானைப் பாடுவதன்றி நரஸ்துதி செய்யேன்" - என்னும் வைராக்கியத்துடன் வாழ்ந்த வாக்கேயகாரர்
(1) அருணாசலக்கவிராயர் (2) சியாமாசாஸ்திரிகள்
(3) தியாகராஜ சுவாமிகள் (4) முத்துஸ்வாமி தீக்ஷிதர்

**12.** எல்லா ஸ்வரங்களும் கோமளஸ்வரங்களாக வரும் இராகம்
(1) சுபபந்துவராளி (2) தோடி
(3) நடபைரவி (4) மாயாமாளவகௌளை

**13.** தற்போது வழக்கிலுள்ள 24 மெட்டுக்களையுடைய வீணையினை "சர்வராக மேளவீணை" என்னும் பெயரால் தனது நூலில் குறிப்பிட்டவர்
(1) வேங்கடமகி (2) மதங்கர்
(3) இராமாமாத்யர் (4) பத்ராசல ராமதாஸர்

**14.** பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அங்கங்களை மாத்திரம் எடுத்துக்கொள்ளும் உருப்படிகள்
(1) கீதம், ஸ்வரஜதி (2) பதம், கீதம்
(3) கீர்த்தனை, பதம் (4) வர்ணம், க்ருதி

**15.** பின்வருவனவற்றுள் சிம்ஹேந்திரமத்யம இராகத்தைக் குறிக்கும் சங்கேதாட்சரம்
(1) ப்ரஹ்ம - பூ (2) திசி - கோ
(3) வஸு - கோ (4) ருத்ர - மா

**16.** விலோம சிட்டைஸ்வரத்தினைக் கொண்டுள்ள உருப்படி
(1) அடதாள வர்ணம் (2) இராகமாலிகை வர்ணம்
(3) இராகமாலிகை (4) ஸ்வரஜதி

**17.** பண் - வியாழக்குறிஞ்சிக்கு ஒப்பான இராகம்
(1) சங்கராபரணம் (2) நவரோஜ்
(3) சௌராஷ்டிரம் (4) ஆரபி

**18.** "அன்பே தான் இன்ப ஊற்று" - என்ற கீதத்தை இயற்றியவர்
(1) வீரமணி ஐயர் (2) திலகநாயகம் போல்
(3) டி. வி. பிச்சையப்பா (4) பெரியசாமித்தூரன்

**19.** ஸா; தநீதா, பா என்னும் ஸ்வரக் கோர்வையின் மொத்த அட்சரகாலம்
(1) 3 (2) 4
(3) 6 (4) 8

**20.** நாட்டியத்திற்கு உகந்த ஜதிகளுடன் கூடிய ஸ்வரஜதி
(1) சாம்பசிவாயனவே (2) ராவேமேமகுவ
(3) ஏமாயலாடிரா (4) காமாட்சி

**21.** "அனுமார் பிள்ளைத்தமிழ்" - என்னும் நூலை இயற்றியவர்
(1) அண்ணாமலை ரெட்டியார் (2) அருணாசலக்கவிராயர்
(3) திரிகூட இராசப்பக்கவிராயர் (4) முத்துத்தாண்டவர்

**22.** வெண்பா பாடுவதற்கேற்ற இராகம்
(1) சங்கராபரணம் (2) கல்யாணி
(3) கரஹரப்ரியா (4) மத்தியமாவதி

[பக். 3 ஐப் பார்க்க

WWW.OLEVELAPI.COM
අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...

**23.** இசைக் கச்சேரிகளில் மிருதங்க வாத்தியக் கலைஞன் தனது திறமையைக் காட்டும் விதமாக வாசிக்கும் பகுதி
(1) முத்தாய்ப்பு (2) நடைவாசிப்பு
(3) தனியாவர்த்தனம் (4) பக்கவாசிப்பு

**24.** "ஸ்வாமி நாதா" என்ற கீதம் அமைந்துள்ள இராகத்தின் ஆரோகண அவரோகணம்
(1) ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ (2) ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ
(3) ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ (4) ஸரிகபதஸ் - ஸ்நிதபமகரிஸ

**25.** "கற்பகவல்லி நின் பொற்பதங்கள்" - என்னும் பாடலை இயற்றிய ஈழத்து சாகித்தியகர்த்தா
(1) என். சண்முகரத்தினம் (2) மாவிட்டபுரம் உருத்திராபதி
(3) என். வீரமணி ஐயர் (4) டி. வி. பிச்சையப்பா

**26.** எல்லா தேசத்து இசையிலும் காணப்படும் கர்நாடக இராகம்
(1) பிலஹரி (2) சங்கராபரணம்
(3) நடபைரவி (4) மோகனம்

**27.** முத்துத்தாண்டவரால் இயற்றப்பட்ட பதங்களில் ஒன்று
(1) அருமருந்தொரு (2) பால் வடியும் முகம்
(3) தெருவில் வாரானோ (4) அலைபாயுதே

**28.** இராஜ வாத்தியம் என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் வாத்தியம்
(1) நாதஸ்வரம் (2) தவில்
(3) மிருதங்கம் (4) வீணை

**29.** கல்யாணி இராகத்தின் பஞ்சமத்தை கிரகபேதம் செய்தால் உண்டாகும் இராகம்
(1) சங்கராபரணம் (2) ஹரிகாம்போதி
(3) கரஹரப்ரியா (4) தோடி

**30.** மிஸ்ரஜாதி ஜம்பை தாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கையை எடுத்துக்கொள்ளும் தாளம்
(1) சதுஸ்ரஜாதி அடதாளம் (2) மிஸ்ரஜாதி மட்டியதாளம்
(3) சதுஸ்ரஜாதி மட்டியதாளம் (4) திஸ்ரஜாதி துருவதாளம்

**31.** தியாகராஜ சுவாமிகளால் பிரசித்திக்கு வந்த இராகம்
(1) தோடி (2) சங்கராபரணம்
(3) கரஹரப்ரியா (4) கல்யாணி

● கீழே தரப்பட்ட அலங்காரத்தின் ஓர் ஆவர்த்தனத்தை அடிப்படையாகக் கொண்டு **32** தொடக்கம் **34** வரையான வினாக்களுக்கு விடை தருக.

**ஸாகாரீஸ / கரி / ஸாகாரீக / ஸாரீகமா //**

WWW.OLEVELAPI.COM

**32.** மேற்குறிப்பிடப்பட்ட அலங்காரம் அமைந்துள்ள தாளம்
(1) மிஸ்ரஜாதி அடதாளம் (2) மிஸ்ரஜாதி துருவதாளம்
(3) கண்டஜாதி மட்டியதாளம் (4) சங்கீர்ணஜாதி துருவதாளம்

**33.** தரப்பட்டுள்ள ஆவர்த்தனத்திற்கு அடுத்ததாக வரும் ஆவர்த்தனம்
(1) ரீபாமாக / ரிக / ரீமாகாரி / ரீகாமபா // (2) ரீமாகாரி / கம / ரீமாகம / ரீகாமபா //
(3) ரீகாரீஸ / கரி / ரீமாகாம / ரீகாமபா // (4) ரீமாகாரி / மக / ரீமாகாம / ரீகாமபா //

**34.** மேலே தரப்பட்டுள்ள ஆவர்த்தனத்தில் வரும் நெடில் ஸ்வரங்களின் எண்ணிக்கை
(1) 6 (2) 8
(3) 9 (4) 10

**35.** அந்தர்பக்தி, பகிர் சிருங்காரம் என்னும் விசேட அம்சங்களைக் கொண்ட உருப்படி
(1) பதம் (2) இராகமாலிகை
(3) ஜதிஸ்வரம் (4) கீதம்

[பக். 4 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ....

**36.** பஞ்சவண்ணத் தூது என்னும் பிரபந்தத்தை இயற்றிய ஈழத்துப் புலவர்
(1) பூலோகசிங்க முதலியார் (2) தாவடியூர் இராசையா
(3) இணுவில் சின்னத்தம்பிப் புலவர் (4) விபுலானந்த அடிகள்

**37.** பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளின் சிறப்புப் பெயர்
(1) தானவர்ண மார்க்க தரிசி (2) விசித்திர சித்த
(3) ஆதி குரு (4) வெயிகீத

**38.** ஸ்வர அடுக்குகள் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடர்ச்சியாக வரும் இசை வகை
(1) மெலடி (2) ஹார்மனி
(3) பொலிபோனி (4) ஹிந்துஸ்தானி

**39.** பின்வரும் கூற்றுகளில் மத்தியமாவதி இராகத்திற்குப் **பொருந்தாத** கூற்று யாது?
(1) சுத்தஸாவேரியின் ரிஷப மூர்ச்சனையே இவ்விராகம் ஆகும்.
(2) கரஹரப்ரியாவின் ஜன்னிய ராகமே இவ்விராகம் ஆகும்.
(3) இவ்விராகம் செந்துருத்திப் பண்ணிற்கு ஒப்பான ராகம் ஆகும்.
(4) இவ்விராகம் தோஷ நிவர்த்திக்குரிய இராகம் ஆகும்.

**40.** சீர்காழி மூவர் என சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர்கள்
(1) கோபாலகிருஷ்ண பாரதியார், பாபநாசம் சிவன், அருணாசலக்கவிராயர்
(2) முத்துத்தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக்கவிராயர்
(3) முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக்கவிராயர்
(4) அருணாசலக்கவிராயர், கனம் கிருஷ்ணய்யர், மாரிமுத்தாப்பிள்ளை

* *

WWW.OLEVELAPI.COM

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස සාමාන්‍ය පෙළ සියලුම විෂය ධාරාවන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් හා තවත් බොහෝ දෑ ලබාගැනීමට පිවිසෙන්න www.olevelapi.com වෙත ...